# வெற்றிடங்கள்

## திட்ட ஊழியரின் ஆட்சேர்ப்பு

## வர்த்தக விவசாய அபிவிருத்தி (CAD)

### மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP) – கட்டம் II

### (திட்டக் காலம் - 2026   2031)

### கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP) – கட்டம் II இன் வர்த்தக விவசாய அபிவிருத்தி (CAD) திட்டத்திற்காக முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) 02/2026 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி பின்வரும் பதவிகளுக்காக "ஒப்பந்த அடிப்படையில்" திட்ட முகாமைத்துவ ஊழியர்களின் ஆட்சேர்ப்புக்குத் தகுதி பெற்ற மற்றும் அர்ப்பணிப்புடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. திட்டத்தின் மொத்தச் செலவு உள்ளூர் மூலங்களின் பங்களிப்புடன் 536.5 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

பதவியின் சம்பளம் 2026.03.28 ஆம் திகதிய 02/2026 முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபத்தின் இணைப்பு 02 மற்றும் 10/2025 பொது நிர்வாக சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வெற்றிடங்களின் விபரம்:**

| இல. | விபரம்/ வேலையிடம் | சம்பள அளவு | பதவிகளின் எண். |
|---|---|---|---|
| 1 | PIU தலைவர் | பிரிவு B | 1 |
| 2 | விவசாய நிபுணர் (தொழில்நுட்பம்) | பிரிவு C | 1 |
| 3 | விவசாய நிபுணர் (தொழில்முயற்சி/ மதிப்புச் சங்கிலி) | | 1 |
| 4 | நிறுவன மற்றும் திறன் மேம்பாட்டு நிபுணர் | | 1 |
| 5 | விவசாய முகாமையாளர் - தொழில்நுட்பம் (தொழில்முயற்சி/ மதிப்புச் சங்கிலி) | பிரிவு D | 1 |
| 6 | தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) | பிரிவு E | 1 |
| 7 | விவசாய தொழில்நுட்ப அதிகாரி (தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சி/ மதிப்புச் சங்கிலி) | | 2 |
| 8 | விவசாய துறை உதவியாளர் - தொழில்நுட்ப மற்றும் தொழில்முயற்சி/ மதிப்புச் சங்கிலி | பிரிவு F | 2 |
| 9 | முகாமைத்துவ உதவியாளர் | MN – 2 (2025) தரம் III | 2 |
| 10 | ஓட்டுநர் | PL – 3 (2025) தரம் III | 2 |
| 11 | அலுவலக உதவியாளர்/ பியோன் | PL – 1 (2025) தரம் III | 1 |
| 12 | தொழிலாளர் | | 1 |

**பொருந்தும் சுற்றுநிருபம்:**

- பிரிவு B – F சம்பள அளவுக்காக MSD சுற்றுநிருபம் 02/2026
- உதவிப் பணியாளர்களுக்காக பொது நிர்வாக சுற்றுநிருபம் 10/2025 மற்றும் MSD சுற்றுநிருபம் 02/2026 (உதவிப் பணியாளர் பதவிக்காக அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகள் கருத்தில்கொள்ளப்படும்)

விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி மற்றும் அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு கட்டாய முன் தேவைகளாகும். இலங்கை வெளிநாட்டு நிதியிலான வேலையில் அனுபவம் மேலதிக அனுகூலம் ஒன்றாக அமையும்.

அரச சேவையில் தற்போதுள்ள விண்ணப்பதாரர்கள் மேலுள்ள பதவிகளுக்கு தமது திணைக்கள தலைவர் மூலமாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு https://mwsip.lk/careers/ என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும். (மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களுக்கு நிதி அமைச்சின் இணையதளத்தை பார்க்கவும்.

விண்ணப்பதாரர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு கீழ் தரப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2026.08.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் ஒவ்வொரு பதவிக்காகவும் தனித்தனியே தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மகாவலி நீத்ர்ப் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் - கட்டம் II திட்டம்**
**(மனித வள பிரிவு)**
**இல. 493/1/1,**
**டீ.பி. ஜாயா மாவத்தை**
**கொழும்பு - 10.**

குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அழைக்கப்படுவர். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**திட்டப் பணிப்பாளர்**
**மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் - கட்டம் II திட்டம்**